# அறம் வளர் இளந்தமிழ்



* உடலுழைப்பு * சிக்கனம் * சமத்துவம் *



கதிரவன் வரவு கண்டு -
கமலம்
இதழ் விரித்துச்
சிரித்ததுவோ!
அது கண்டு......
புது மொட்டுப் பூரித்து
நின்றதுவோ!
ஆம்......
மொட்டும் மலராகலாம்
மலரும் வித்தாகலாம்
இவையும் நாளை......
புதுக் கதையாகலாம்.


ஒலி: 2    15-09-1993    மடல்: 1

சிறுவர்களுக்கான காலாண்டு சஞ்சிகை

விநாயகர் தரும நிதிய இலவச வெளியீடு

பிரதிகள்: 1960
முடிவு விலை: 9/-
பக்கங்கள்: 36



# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள்சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும், எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக் கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதாரகமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறோம்.

15 - 9 - 93 — நிறுவனர்

## இதழின் உள்ளே . . .


- ★ எண்ணங்கள்.
- ★ தலை எழுத்தின் மகிமை.
- ★ குறளின் கூற்று.
- ★ நொடியும் விடையும்.
- ★ தலைநகராம் தலைநகர். ( கவிதை )
- ★ கலியுகத்தின் மகிமை — புதையல் யாருக்கு.
- ★ தெரிந்து கொள்ளுங்கள்:-
  அழும்போது கண்ணீர் வரக் காரணம்?
- ★ ஆபத்துக்குதவாத நண்பன்.
- ★ விண்வெளி காண்பேரம்.
- ★ சேர் ஐசாக் நியூற்றன்.
- ★ மாணவர்களுடைய வாழ்க்கையின் குறிக்கோள்.
- ★ கலைந்த வேடம்.
- ★ எங்களை ஏன் அழிக்கின்றீர்கள்.

ஊ—

# ★ அறம் ★ வளர் ★ இளந் ★ தமிழ்

## எண்ணங்கள்.

நாம் இப்பகுதியில் இளம் சிறார்களாகிய நீங்கள் சிறுவயதிலேயே அழகான உறுப்பெழுத்தை எழுதப் பழகிக் கொள்ள வேண்டும் என பலமுறை வினயமாக வேண்டியிருக்கிறோம். இதை எமக்காகவோ எமது நன்மைக்காகவோ வேண்டவில்லை உங்கள் வாழ்வும் வளமும் எமது தமிழ் மொழியும் உயர்வடைய வேண்டும். என்ற எமது அவாவே காரணமாகும். ''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்ற வாக்கியத்திற்கமைவாக உங்கள் சிறுபராயக் கல்வியைத் தொடங்கும் போது அழகாகவும் உறுப்பாகவும் தெளிவாகவும் எழுதப் பழகிக் கொள்வீர்களேயானால் அதன் உண்மைப் பயனை உங்கள் எதிர்கால வாழ்க்கையில் அறிய முடியும் என்ற எமது இதுகாலவரையுள்ள அனுபவத்தைக் கொண்டே இந்த வேண்டுகோளை திரும்பத் திரும்ப வேண்டிக் கொள்கிறோம். சிறு வயதிலேயே அழகிய உறுப்பெழுத்தை எழுதப் பழகிக் கொள்ளல் அவசியமாகும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்று கூறுவார்கள் எனவேதான் சிறுபராயத்திலேயே கற்கின்ற ஒவ்வொரு விடயத்தையும் "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்'' என்பதற்கமைய அவதானத்துடன் கையாண்டால் உங்கள் வாழ்வை வளமடையச் செய்யும்.

எந்த விடயத்தையும் எமது சுயமுயற்ச்சி மூலமே வெற்றிகொள்ள முனைய வேண்டுமே தவிர அடுத்தவர் இடம் கையேந்தி அதன் மூலம் எமது குறிக்கோளை நிறைவு செய்யும் நினைவு கனவிலும் எமது உள்ளத்தில் குடிகொள்ளல் கூடவே கூடாது. யப்பானை எடுத்துப்பாருங்கள் அவர்களது கடின உழைப்பையும் தமது தாய்நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும் சிந்தித்துப் பாருங்கள். செய்யும் தொழில்தான்

தெய்வம். என்ற தத்துவத்தை ஆராய்ந்து பாருங்கள். எதற்கெடுத்தாலும் விதி—விதி என்று வீண்கதைகள் பேசுவதைத் தவிருங்கள். ஏன் நாம் யப்பானைப்போல் உயர்வடைய முடியவில்லை என்ற சிந்தனையை எம் உள்ளத்தில் உலாவ விடுங்கள். சிந்தனை வளர்ந்தாலே எமது எண்ணம் விரிவடையும் - எண்ணம் விரிவடைந்தால் நாடு வளமடையும். சிந்தனையும் - செயற்பாடுமே ஒரு மனிதனை வளர்க்கின்றது - வளமாக்கின்றது. எனவே அறநெறிக் கருத்துக்களையும் அடுத்தவர்க்கு தொண்டு செய்யும் சேவை மனப்பான்மையையும் எம் நெஞ்சத்தில் துளிர்க்க விடுவோமேயானால் நாமும் உயர்வடைவோம். நாடும் உயரும். இது முழுவதும் உண்மை.

'' தன்வினை தன்னைச் சுடும். '' என்பதற்கொப்ப பாரிய அழிப்பினால் யப்பான் தேசமே அழியவேண்டிய நிலை ஏற்பட்டது. தம் நாட்டில் ஏற்பட்ட அழிவுக்காக தெய்வத்தை அவர்கள் நோகவில்லை. பொருளாதாரத்தை நோகவில்லை. மாறாக தமது வினைப் பயனால் விழைந்த விபரீதம் என்பதையும் அவ்வினைப்பயனை நீக்குவதற்கு தொழிலே தெய்வம். என்பதையும் உணர்ந்து கொண்டார்கள்.

அவர்களது அறநெறிச் சிந்தனை காரணமாக மற்றைய நாடுகளுக்கு கடனாகவும், உதவித் தொகையாகவும் அந்நாட்டு அபிவிருத்திக்கு பல கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்கி உதவி வருகிறார்கள் வேற்று நாட்டு மாணவர்களுக்கு தமது பல்கலைக் கழகங்களிலே புலமைப் பரிசில் மூலம் கல்விவசதிகள் செய்து கொடுத்து அந்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்கிறார்கள்.

தமது நாட்டில் உள்ள நிலப்பரப்பு முழுவதையும் சுத்தமாக வைத்திருக்கப் பழகிக் கொள்கிறார்கள். தமது நாடளாவிய ரீதியில் சுகாதாரம் பேணி சுற்றுப்புறச் சூழலை சுகாதாரமாக வைத்திருக்கிறார்கள். இக் காரணங்களினால் அவர்களது இதயத்தை இயக்கும் காற்று சுத்தமாக அமைவதால் அவர்களது சிந்தனைகள் அறநெறிச் சிந்தனையாகவே பௌர்ணமிக்கின்றது. இன்றைய யப்பானின் தலைநகரான டோக்கியோவின் சனத்தொகை 3 கோடியை நெருங்கியுள்ளது இந்த சன நெருக்கடியை சமாளித்து பேணும் முகமாக கடலில் எழுபத்தையாயிரம் மக்கள் வாழக் கூடிய நகரத்தையே உருவாக்கி உள்ளார்கள். அங்கே வீட்டு வசதியுடன், விளையாட்டு மைதானம் நீச்சல் தடாகம் போன்ற வசதிகளை உருவாக்கி தேவ உலகம் என்று சொல்லக் கூடிய உலக சாதனை படைத்துள்ளனர்.

அமெரிக்காவோ தங்கச்சுரங்கம் நிறைந்த வளம் நிறைந்த நாடு எனவே அமெரிக்காவை பொருளாதாரத்தால் வெல்வது என்பது எந்த நாட்டாலும் முடியாத விடயமாகும். ஆனால் யப்பானோ பூகம்பம் எரிமலை கொண்ட வளம் குறைந்த நாடு. இவ்வாறு இருந்த போதும் தங்கள் நாட்டின் நில அமைப்பைக் கூறிப்புலம்பி — அமெரிக்கா மீதோ மற்றைய வளம் நிறைந்த நாடுகள் மீதோ குறைகூறித் திரியாது தன் கையே தனக்குதவி என்ற தாரக மந்திரத்தை எடுத்துக் கொண்டு எந்த நாடும் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் தொழில் நுட்பத்திலும் தொழில் வளத்திலும் உயர்ந்து வளர்ந்து ஞானவழியில் சென்று கொண்டு இருக்கிறார்கள்இன்றைய யப்பானியர்கள்.

நேரம் பொன்னானது என்பதை தமது சூக்கும தேகத்தில் பதித்துக் கொண்டார்கள். தமது மண், தமது மக்கள், தமது மொழி இவற்றை இறைவனாகக் கருதிக் கொண்டார்கள். அவர்களின் சிந்தனை வளத்தால் அவர்களது சூக்கும தேகத்தில் பதிவாகும் ஐவகை அணுக்களின் தொகைகளில் சுயநல அணுக்கள் குறைவதால் பிறப்பை நீக்கும் வழியை அடைகிறார்கள். நாமும் இவற்றை 4, 5 முறையாவது சிந்தித்தால் மேல்நிலையடைய முடியும்.

தொழில் மூலம் மனிதனின் கிரகிக்கும் ஆற்றலை வளர்த்து நேரத்தை பொன்னென மதித்து தொழில் வளத்தை தெய்வமாகப் போற்றி அறநெறி செயற்பாட்டால் ஞானவழிமுறைகளைக் கைக் கொண்டு மற்றோர்க்கு முன்மாதிரியாய் — வழிகாட்டியாய் உயர்ந்து நிற்கும் யப்பானை நாமும் பின்பற்றி உயர வேண்டியது எமது ஒவ்வொருவரின்தும் கடமையென நம்புகின்றோம்.

**எமது** அறத் தமிழ் ஞானம் ஆடி ஆவணி இதழ் 93ல் மேற்கண்ட விதமாக யப்பானைப் பற்றி எமது எண்ணத்தை வெளியிட்ட சில கிழமையில் எமது எண்ணத்தை ஒத்த வகையிலே யப்பானியப் பிரதமரும் வேறு எந்த நாடுகளும் கேளாமலே உண்மை நிலையை எடுத்துக் கூறி தமது நாடு உலக சமுதாயத்திற்கு இழைத்த கொடுமைகளுக்காக பகிரங்க மன்னிப்புக் கோரி எந்த நாடும் செய்யாத அறநெறிக் கோட்பாட்டைக் கட்டி எழுப்பி உண்மைக்கு உயிரூட்டி உயர வைத்து விட்டார் யப்பானியப் பிரதமர் அவர்களது மனமாற்றமும் உண்மையை மதிக்கும் தன்மையும் நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற

வேண்டிய முன் உதாரணங்களாகும். யப்பானின் இவ்வகையான செயற் பாடுதான் அவர்களது ஒளி அணுவில் மாற்றத்தை உண்டு பண்ணி பொருளாதாரத்தை உயர்வடையச் செய்தது. எமது எல்லா இதழ்க ளிலும் எமது கோட்பாடாக உடலுழைப்பையே முதலாக உணர்த்தி வந்துள்ளோம். யப்பானின் வரலாற்றை எடுத்துப் பார்க்கும் போது எமது கோட்பாட்டின் உயர்வை சகலரும் உற்றுணர ஏதுவாக அமைந் துள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்வதோடு உண் மைக்கும் உடலுழைப்பிற்கும் மதிப்பளித்து உயர்வடையுமாறு அன்பா கவும் பண்பாகவும் பணிவாகவும் இரு கரம் கூப்பி வேண்டுகின்றோம்.

கடந்த இருபது முப்பது ஆண்டுகளில் யப்பானிலும் ஜெர்மனி யிலும் அமெரிக்காவிலும் ஏன் தொழில்துறை வளர்ச்சி கண்டது. ஏன் நாம் அந்நாடுகள் போல வளரவில்லை – உயரவில்லை. இக் குறை பாட்டை சிந்திக்கவோ சீர் திருத்தவோ எம் நாட்டுக் கல்விமுறையில் வழிவாய்க்கால்கள் மிகமிகக் குறைவு. ஒரு தொழில் துறையில் நாட் டமுள்ள மாணவனுக்கு அத்துறையில் கல்வியைத் தொடர வாய்ப்பு வசதிகள் எமது கல்வி முறையில் மிகமிகக் குறைவு. எமது கல்வி முறைகள் மேலை நாட்டுக் கல்வியைப் போல் தொழில் துறையையும் மாணவனின் சுயசிந்தனையை வளர்க்கக்கூடிய கல்வியையும் மிளிர பொறுப்பானவர்கள் உழைக்க வேண்டும்.

மேலை நாடுகளை இவ்விடத்தில் எடுத்தாழும்பொழுது மேலை நாட்டை விட நாம் குறைந்தவர்களா – தாழ்ந்தவர்களா என்று சிலர் எண்ணலாம். நாம் எம்மவரின் அறிவிலோ ஆற்றலிலோ குறை காண வில்லை அப்படியானவர்கள் என்று எண்ணவும் இல்லை எம் நாட்டில் இருந்து சென்ற அறிஞர் பெருமக்கள் வெளிநாட்டில் சாதனை படைத் தவர்கள் என்பதை இவ்விடத்தில் நினைவு கூர்ந்து பெருமையடை கின்றோம். அவர்களின் வழித் தோன்றலான எம் இளம் சிறார்கள் உண்மை வழியிலும் அறநெறிச் சிந்தனையிலும் தமது எண்ணங்களை விரிவு படுத்தி எம் நாட்டிலும் இவ்வகையான புதிய தொழில் துறை களையும் – புதிய கண்டுபிடிப்புக்களையும் எம்மாலும் முடியும் என்ற திட சிந்தனையுடன் முயன்று முன்னேற எதிர்கால இளம் சிறார்கள் தங்கள் கல்வியைத் தொடர அறம் வளர் இளம் தமிழ் தனது என் ணத்தை கசிய வைக்கின்றது – காத்திருப்போம் – காலம் பதில் சொல்லும்.

ஸ

# தலை எழுத்தின் மகிமை

**பா**லர்கள் சிறுவயதிலேயே நல்ல எழுத்தை எழுதப் பழகுவதன் மூலம் அவர்கள் வாழ்க்கை மேம்பாடடையுமென்பதை எமது அனுபவத்தின் மூலமாக உற்றுணர்ந்துள்ளோம். அதற்காக பாலர் பாடசாலையில் கல்விபயிலும் சிறுவர்கள் தம் எழுத்தை உறுப்பெழுத்தாக எழுதப் பழகிக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு கற்பலகையை (சிலேற்) போறூட் நிறுவனத்தின் மூலம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவித்து எமது நிதியத்தை மையமாகக் கொண்டு 3 கிலோ மீற்றர் சுற்றாடலில் உள்ள பாலர் பாடசாலைகளுக்கு இலவசமாக விநியோகித்து வருகின்றோம்.

எமது சமுதாயம் வளர வேண்டுமானால் சொந்தக் காலில் நின்று தன் கையைப் பாவித்து பொருள் வளம் பெருக்க வேண்டும். பொருள் வளம் பெருக வேண்டுமானால் தொழில் வளம் மிக முக்கியம். தொழில் வளம் பெருக வேண்டுமானால் மக்களின் கைவளம் மிக முக்கியம். கைவளம் நன்றாய் அமைவதற்கு சிறுபராய எழுத்து மிக முக்கியம். எனவே தான் சிறுபராயத்தில் இருந்தே உறுப்பெழுத்தை எழுதுவித்து சிறுவர்களின் வாழ்வை வளம்படுத்தும் நோக்கோடு பாலர் கல்வி நிலையங்களின் உதவியோடு இப்பணியில் இறங்கியுள்ளோம்.

கற்பலகையை (சிலேற்றை) பயன்படுத்தும் பாலர் பாடசாலை ஆசிரிய – ஆசிரியைகள் எழுத்தை நல்ல எழுத்தாக்க ஆவன செய்து பாலர்களின் தலை எழுத்தை நல்ல எழுத்தாக மாற்றி நாடு வளம் பெற ஆவன செய்யுமாறு அன்பாகவும் பண்பாகவும் பணிவாகவும் வேண்டுகிறோம்.

எமது இப்பணிக்கு ஆதரவு நல்கி கொழும்பில் இருந்து கற்பலகையை தருவித்துத் தந்த பருத்தித்துறை போறூட் நிர்வாகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும்

தெரிவித்துக் கொள்கின்றோம். பாலர்களும் – பாலர் கல்வி நிறுவனத்தினரும் இக்கற்பலகையை பயன்படுத்தி எதிர்காலத்தில் ஒளிமயமான ஒரு சமுதாயம் அமைய தமது பங்கு பணிகளை எம்முடன் இணைந்தாற்றி நாடு வளம் பெற நற்பணி புரியும்படி அன்புடனும், பண்புடனும், பணிவுடனும் இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

அறத் தமிழ் ஞானம் சித்திரை – ஆனி 93 இதழில் இருந்து மறுபிரசுரம் செய்கின்றோம்.

— நிறுவனர்.

உ—



## குறளின் கூற்று

— குமரன் —

**ம**னிதர்களுக்கு எவ்வளவு பொருளிருந்தாலும் மேலும் மேலும் பொருள் சேர்க்கத்தான் ஆசை. ஆசைகளிலேயே மனிதன் அழிந்து போகிறான். ஒரு கதை உண்டு.

ஒருவனிடம் அரசன் சொன்னானாம். '' உனக்குப் பரிசாக நிலத்தைத் தருவதற்குத் தீர்மானித்துள்ளேன். அதோ விரிந்து பரந்த எல்லை தெரியாது நிற்கும் நிலப்பரப்பைப் பார். அதில் உனக்கு எவ்வளவு வேண்டுமென நீ நினைக்கிறாயோ அதை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு நிபந்தனை. உனக்கு வேண்டிய நிலப்பகுதியை எடுத்துக் கொள்ள நீ ஓடிச்செல்ல வேண்டும். ஓடிஓடியே நிலத்தை நீ உன்னுடையதாக்கிக் கொள்'' என்று. அதற்கு அவனும் சம்மதித்து ஓட்டத்தை ஆரம்பித்தான். ஓடினான், மூச்சிரைக்க இரைக்க ஓடினான். மேலும் மேலும் ஓடஓட, இன்னும் இன்னும் கூடுதலான நிலம் வேண்டுமென்ற ஆசையே அவனுக்கு உண்டாயிற்று. நீண்ட தூரம் ஓடி விட்டான். ஓடி ஓடிக் களைத்து விட்டான். ஆயினும் பெருமளவு நிலப்பரப்பைப் பிடித்து விட்ட திருப்தியும் உண்டானது. ஆனால் ஆசை விடவில்லை. மேலும் பெருமளவு நிலத்தைப் பிடிக்க வேண்டிய ஆவல் உண்டானது. மீண்டும் ஓட்டம் ஓடி, ஓடி இறுதியில் ஓரிடத்தில் மூர்ச்சை

யடைந்து இறந்து போனான். அதன் பின் அங்கு வந்த ஆசான் அவனது பிணத்தைப் பார்த்துச் சொன்னானாம் ''இப்போது இவனுக்கு ஏழு அடி நிலம் போதும்'' என்று.

இப்படி ஒவ்வொருவரும் ஆசையிலேயே மூழ்கிப் பொருள் பண்டம் சேர்த்துக் கொண்டிருகையில், தனது கடின உழைப்பினால் தேடிய செல்வத்தை அறவழியில் செலவு செய்பவர்களும் ஆங்காங்கே உள்ளனர்.

வள்ளுவர் காலத்திலிருந்தே வள்ளல்கள் இருந்து வந்துள்ளனர். சங்க காலத்திலே ( அதுதான் வள்ளுவர் காலமெனப்படுகிறது ) முதல் இடை, கடை ஏழு வள்ளல்கள் இருந்தனர் எனக் கூறப்படுகிறது. மயிலுக்குப் போர்வை வழங்கிய பேகன், முல்லைக்குத் தேர் ஈந்த பாரி இரவலர்க்கு நாடும் குதிரையும் ஈந்த காரி, பெருவள்ளல் எனப் போற்றப்பட்ட ஆய், வாரி வழங்கிய நள்ளி, ஔவைக்கு நெல்லிக் கனி ஈந்த அதியமான், கூத்தர்க்கு நாடு கொடுத்த ஓரி ஆகியோரைப் பற்றி சங்ககால நூலான சிறுபாணாற்றுப் படையில் பாடப்பட்டுள்ளது.

அந்த மரபு இன்னும் தொடர்கிறது. எத்தனையோ வள்ளல்கள் தமது செல்வங்களைத் தரும வழியிலே செலவிட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகையவர்கள் முயற்சி செய்வது ஏனெனில் தமது முயற்சியின் பயனாகக் கிடைக்கும் பொருட்களை உபகாரம் செய்வதற்கே இதனைக் கூறும் குறள் இதுதான்.

*தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு.*

இத்தகைய வள்ளல்கள் தாம் முயற்சி செய்து தேடிய பொருட்களை உபகாரம் செய்யும் பொருட்டே கொண்டிருப்பர் எனத் திருவள்ளுவர் இக்குறலிலே கூறுகிறார். ''அறம் வளர் இளந் தமிழ்'' தந்த வள்ளலும் இத்தகையவரே.

> உலகெங்கிலும் யோக்கியர்கள் ஒரே விதமாகத்தான் இருக்கிறார்கள். அயோக்கியர்கள் தான் நாட்டுக்கு நாடு ஊருக்கு ஊர் வித்தியாசப்படுகிறார்கள்.
>
> '' பெர்னாட்ஷா ''

ஸ—

# அறநெறிப் போட்டி இல (2உ)

# இரண்டிற்கான விடைகள்

1) i] சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்.
ii] உண்டி சுருங்குதல் பெண்டிற் கழகு.
iii] சான்றோர் என்கை ஈன்றோர்க் அழகு.

2) i] சீரைத் தேடின் ஏரைத் தேடு.
ii] தொழுதூண் சுவையின் உழுதூணினிது.
iii] மேழிச் செல்வம் கோழை படாது.

3) மௌனம் ஞானமார்க்கத்தின் எல்லையாகும்.

4) பரிசுத்தமான சிந்தை உடையவனிடம் கள்ளம் புகாது.

5) வளவன் ஆயினும் அளவறிந்து அளித்துண்.

6) i] போனகம் — உண்மையான உணவு.
ii] உரவோர் — மனவலிமையுடையவர்.
iii] மோனம் — மௌனம்.

7) i] சீறின்-
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை.
ii] சுருங்கில்-
வானம் சுருங்கில் தானம் சுருங்கும்.
iii] எண்ணித்துணி-
நுண்ணிய கருமமும் எண்ணித்துணி.

ஏ—

# அறநெறிப் போட்டி இல [2உ]

## பரிசு பெறுவோர் விபரம்

1. செல்வன் மா. சுதர்சன் 150/-
தமிழொழி மாணவர் மன்றம்,
தும்பளை தெற்கு — பருத்தித்துறை.

2. செல்வி அருணாசலம் தாரணி 100/-
மோட்டஞ்சீமா,
அல்வாய் கிழக்கு — அல்வாய்.

3. செல்வன் கு. முகுந்தன் 75/-
தேவி வாசா,
வல்லிபுரம் ஒழுங்கை — பருத்தித்துறை.

4. செல்வி இ. சயந்தினி 50/-
90, அளவெட்டி தெற்கு — அளவெட்டி.

5. செல்வி ச. சுபாஜினி 50/-
187, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்.

6. செல்வி நி. யசோதா 50/-
45, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

7. செல்வன் த. சிறினிவாசன் 50/-
நெல்லண்டை வீதி,
தும்பளை — பருத்தித்துறை.

ஊ—

# நொடியும் விடையும்

## — கோப்பாய் சிவம் —

(1) துடிப்பு இருக்கும் இதயமல்ல முள் இருக்கும் செடி யல்ல?

(2) கண்ணிருக்கும் மனிதனில்லை பாலிருக்கும் பசுவல்ல.

(3) கறுத்தக் காட்டிலே கட்டாக் காலி மாடுகள்

(4) கண்டால் பயமில்லை உண்டால் உயிரில்லை

(5) குதிரை மிகவும் கொழுப்பதேன் குவிந்த செல்வம் அழிவதேன்

(6) மேல் வீட்டில் மத்தளம் கீழ் வீட்டில் நாட்டியம்

(7) சூடுபட்டு சிவந்தவன் வீடுகட்ட உதவுவான்

(8) சின்ன மச்சான் குனியவைச்சான்

(9) நாக்கு இனிப்பதேன் நாய் ஓடுவதேன்

(10) சொல்லாமல் வரும் நில்லாமல் போகும்

---

### விடை

| | |
|---|---|
| 1] கடிகாரம். | 2] தேங்காய். |
| 3] பேன். | 4] விஷம். |
| 5] கொள்ளையிட்டு | 6] இடியும் மழையும் |
| 7] செங்கல் | 8] முள். |
| 9] கற்கண்டு. | 10] நாள். |



# தலைநகராம்! தலைநகர்!

செல்வி ச. கந்தையா

தலை நகராம் தலைநகர்
தள்ளி விழுத்தும் தலைநகர் (மினிபஸ்)
காசு பணம் பறிக்கின்ற
கள்வர் நிறைந்த தலைநகர்
கழுத்தில் உள்ள நகைபறிக்க
கழுத்தை வெட்டும் தலைநகர்
வீசி - வீசி ஓடுகின்றார் — இங்கே
வீண்கதைகள் பேசுகின்றார்
கண்டபடி நடக்கின்றார் — எங்கள்
கலாச்சாரத்தையே மறக்கின்றார்
போதை ஏறி பாதை மாறி
சூதை நாடிச் செல்கின்றார்
சிந்தை நொந்து அழுகின்றேன் — இதை
சீர் திருத்த யாருமில்லை — யாழ்
வந்து சேரும் நாளுக்காய் — தினம்
வந்தனங்கள் செய்கின்றேன்-

(கொழும்பு நகரத்தின் அவலத்தை சிந்தை நொந்து — வெந்து கவிதையாய் வடித்துளார் படைப்பாளி செல்வி ச. க. கந்தையா)

## ★ கலியுகத்தின் மகிமை ★

# புதையல் யாருக்கு?

— க. வாணிமுகுந்தன் —
யா/ஹாட்லிக் கல்லூரி,
கல்லூரி வீதி - பருத்தித்துறை.

துவாரர யுகம் முடியும் காலம். மகாபாரத யுத்தம் முடிந்து பாண்டவர் முதல்வன் ஆட்சி புரிந்து வந்த சமயம் நீதி, நெறி, நியாயம், தர்மம், சத்தியம், ஒழுக்கம், நேர்மை, அனைத்தும் சீரும்சிறப்புமாய் விளங்கிய ஒளிமயமான பொற்காலம். அக்காலத்தில்,

ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு தனது காணியை விற்று விட்டான். அக்காணியை வேண்டியவன் அந்நிலத்தில் பயிர் செய்வதற்காக நிலத்தைக் கொத்தும் போது 'கல் கல்' என்ற சத்தம் கேட்டது. அப்பொழுது அவன் மேலும் நிலத்தைத் தோண்டலானான். அப்பொழுது ஒரு வெண்கலத்தாலான செம்பும் அது நிறைய தங்க நாணயங்களும் காணப்பட்டன. உடனே அவன் நிலத்தை விற்றவனிடம் அப்புதையலைக் கொண்டு போய் இது நீங்கள் விற்றகாணியில் கிடைத்தது. இது உங்களுக்கே சொந்தம்என்று கூறினான். அதற்கு அவன் நான் அந்நிலத்தை உனக்கு விற்று விட்டேன். எனவே இது உனக்கே சொந்தம் எனக் கூறினான். இருவரிடமும் வெகுநேரமாக வாதாட்டம் நடைபெற்றது. இறுதியில் அவ்வூர் மன்னனிடம் அவ்வழக்கைக் கொண்டு போனார்கள். அரசனும் யோசித்துவிட்டு சில மாத காலம் சென்றபின் வரச் சொன்னான்.

அப்படியே அவர்களும் சில காலம் கழித்து வந்தார்கள். என்ன ஆச்சரியம். அவர்கள் தங்கள் வழக்கை மாறிக்கூறினார்கள் காணியை விற்றவன் இந்தப்புதையல் எனக்குத்தான் சொந்தம் எனவும், காணியை வாங்கியவனும் இது எனக்குத் தான் சொந்தம் என்றும் கூறினார்கள். அரசனுக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. அரசன் யோசிக்கலானான்.

அப்பொழுது சபையில் இருந்தவர்களில் ஒருவன் எழுந்து அரசே! விரைவில் இந்த யுகம் முடிந்து கலியுகம் பிறக்கப் போகிறது. அப்போது பொய்யும், புரட்டும், களவும், கற்பழிப்பும், கயமைத்தனமும், பேராசையும், சுயநலமும், அதர்மமும், அநீதியும், கோரத் தாண்டவம் ஆடப்போகின்றது. அவற்றின் அறிகுறியாக முன் அடையாளமாக இப்போதே இந்த வழக்கில் கலியன் சொரூபத்தைக் காட்டிவிட்டது என்றான். அரசனும் இன்னும் சில மாத காலம் கழித்து வரும் அரசனிடம் உங்களது வழக்கைக் கூறுங்கள் என்று கூறினான்.

தர்மபுத்திரன் இறந்த பின், வந்த மன்னனிடம் அவர்கள் தமது வழக்கைக் கூறினார்கள். அரசனும், "முதலில் நீங்கள் நிலத்திற்கு வரி செலுத்தினீர்களா? நிலத்திலிருந்து கிடைத்த புதையல் வாங்கினவனுக்கோ அல்லது நிலத்தை விற்றவனுக்கோ சொந்தம் இல்லை. அந்தப் புதையல் அரசுக்கே உரிமையாகும். அரசுடமையாகி விட்ட அந்தப் புதையலைப் பறிமுதல் செய்து அரசாங்க கஜானாவில் சேர்ப்பிக்கக் கட்டளை இடுகிறேன்" என்று கூறினான்.

அன்று முதல் தான் தனிமனிதன் உரிமையும், உடமையும் அரசுடமை மயமாக்கப்படலாமென்று கலியுகத்தில் தொடக்கம் பெற்றது. வழக்குக் கொண்டு வந்தவர்கள் தலையைக் குனிந்து கொண்டு வீடு சென்றனர்.

என்னே, கலியுகத்தின் மகிமை!

எறும்பின் சுறுசுறுப்பு, எருதின் உழைப்பு, நாயின் நன்றியுணர்வு, கழுதையின் பொறுமை, காகத்தின் கூட்டுறவு, புலியின் வீரம், புறாவின் ஒழுக்கம், சிங்கத்தின் நடை, யானையின் அறிவு இவற்றோடு மானின் வாழ்வு பகுத்தறிவுள்ள மனிதனுக்குத் தேவை.

கி. ஆ. பெ. விசுவநாதம்.

# அறிவுப் போட்டி - 4 விடைகள்

01. அ) நாகதீபம் அல்லது நாகதீவு ஆ) மகாவம்சம்.

02. அ) தம்பிப்பிள்ளைத் தண்டையல்
ஆ) 1930-ம் ஆண்டு.

03. அ) ஔவையார்
ஆ) மழை பெய்யாவிடில், புவியின் மேற்பரப்பு நீரின்றி வறண்டுவிடும். இதனால் தாவரங்களும், இரண்டாம், மூன்றாம்படி நுகரிகளான விலங்குகளும் வாழ முடியாது. எனவே, பூமி உயிரினங்களற்ற பாலைவனமாகும்.

04. அ) 50 வீதம் ஆ) 4 இலட்சம்.

05. அ) யூன் 05-ந் திகதி
ஆ) உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்கும் ஊதாக் கதிர்கள் பூமியை வந்தடையாது தடுக்கும் வளிப்படையே ஓசோன் ஆகும்.

06. அ) பறவைகளைப் பற்றி ஆராயும் படிப்பு
ஆ) எட்டு வகை.

07. அ) இந்துக்கள், முஸ்லீம்கள். ஆ) ஐந்து.

08. அ) ஃபிடல் காஸ்ரோ ஆ) பில் கிளிங்ரன்

09. அ) 1] தமிழ்மக்களுக்கு எதிரான யுத்தத்தை இந்திய அரசு நிறுத்த வேண்டும்.
2] விடுதலைப் புலிகளுடன் பேசி, இணக்கத்திற்கு வர வேண்டும்.
ஆ) காந்தி, பொபிசான்ட்ஸ், பொட்டி ஸ்ரீராமுலு.

10. அ) யப்பான் ஆ) நோர்வே

ள —

# அறிவுப் போட்டி இல - 4

## பரிசு பெறுவோர் விபரம்

1] செல்வி அருணாசலம் தாரணி 150/-
அல்வாய் கிழக்கு — அல்வாய்.

2] செல்வன் த. பிரதீபன் 100/-
ஆண்டு 9 டீ,
ஹாட்லிக் கல்லூரி — பருத்தித்துறை.

3] செல்வன் கு. முகுந்தன் 75/-
வல்லிபுரம் ஒழுங்கை,
புலோலி கிழக்கு — பருத்தித்துறை.


4] செல்வன் த. தவரூபன் 50/-
ஆண்டு 9 சி,
யா/இந்துக் கல்லூரி — யாழ்ப்பாணம்.

5] செல்வன் சி. உமாசிவம் 50/-
புகையிரத நிலைய அருகாமை,
மல்லாகம்.

ஸ—

தெரிந்து கொள்ளுங்கள்!

# அழும்போது கண்ணீர் வரக் காரணம் என்ன?



— தொகுப்பு: சு. ஜெயலட்சுமி —

சோகச்செய்தியாலும், மனம் துன்புறும் நேரங்களிலும் கண்களிலிருந்து தாரைதாரையாக கண்ணீர் வருவதுண்டு. அடிபட்டு அழும்போதும் கண்ணீர் விடுவது இயற்கை. அழுகைக்குக் காரணம் எதுவாக இருந்தாலும் அழுகையுடன் கண்ணீர் இயல்பாக வருகிறது. இதற்குக் காரணம் என்ன என்பது தெரியுமா?

நமது கண்ணிமைகள் எப்பொழுதும் மூடிமூடித் திறந்தபடி இருக்கின்றன. இவ்வாறு இமை கொட்டுதல் தசைநார்களின் இயக்கத்தால் நிகழுகிறது. அடிக்கடி துரிதவேகததில் நடக்கின்ற இந்த நிகழ்ச்சியை நாம் உணருவதே இல்லை. நம்மை அறியாமலேயே எவ்விதமான தூண்டுதலும் இல்லாமலேயே இது இடைவிடாது நிகழுகிறது. இமைமூடித் திறக்கும் செயல் 6 வினாடிக்கொருமுறை என்ற கணக்கில் வாழ்நாள் முழுவதும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

நமது கண்ணின் ஓரத்தில் கண்ணீர் சுரப்பி ( *Teargland* ) என்று ஒன்றுண்டு. இந்தச் சுரப்பியிலிருந்து மெல்லிய நாளங்கள் (*Ducts*) கண்ணீரை மேல் இமைக்குக் கொண்டு செல்கிறது. அங்கிருந்து வேறுசில மெல்லியகுழாய்கள் வழியாக கண்ணீர் வெளிப்படுகிறது.

கண்ணிமைக்கும் போதெல்லாம் கண்ணீர் குழாயிலிருந்து சிறிதளவு திரவம் வெளிப்படுகிறது. இப்பொருள் கண்களிற்கு ஈரம் தந்து கண் உலராமல் பாதுகாக்கிறது. அழும்போதும் கண்ணீர்ச் சுரப்பியிலிருந்து திரவப் பொருள் சிறுகுழாய்கள் வழியாக வெளிவருகிறது. இதையே கண்

ணீர் என்கின்றோம். குலுங்கக் குலுங்கச் சிரிக்கும் போது சில ருக்குக் கண்ணீர் வந்துவிடுகிறது. ஆனந்த மிகுதியால் வெளிப்படும் கண்ணீரை ஆனந்தக் கண்ணீர் என்கின்றோம். உரக்கச் சிரிக்கும் போது கண்ணீர்ச் சுரப்பிகளில் அழுத்தம் ஏற்பட்டு அங்கே சேர்ந் திருக்கும் நீர்வெளியே வருகிறது.

வெங்காயம் நறுக்கும் போது அழாமலேயே கண்ணீர் வருவ தைக் காணலாம். இது ஏன்? வெங்காயத்தை வெட்டும்போது அதிலிருந்து விரைவில் நீராவியாக மாறும் ஒரு பொருள் வெளிப் பட்டு கண்ணில் எரிச்சலை உண்டு பண்ணுகிறது. கண்களினுள் புகும் இந்த நீராவிப் பொருளைக் கழுவி வெளியேற்ற கண்ணீர் அதிகமா கச் சுரக்கிறது. சிகரெட் புகை கண்ணினுள் சென்றாலும் கண் களில் நீர் வருகிறது.

துன்பம் அல்லது உணர்ச்சி மேலிடும் நிலைகளில் ஒரு பிரதி பலிப்புச் செயல் (*Reflexaction*) நிகழுவதால் கண்ணீர்ச் சுரப்பிக ளிலிருந்து மனத் தாங்கலை வெளிப்படுத்துகிற செயல்திறன் இல்லாத நேரங்களில் கண்ணீர் அந்த மனத்தாங்கலை வெளிப் படுத்துகிறது.

---

## பட்டுத்துணியால் அடைக்கலாமா?

சென்னைத் தொலைக்காட்சியில் காட்டப்பெற்ற அறுவைச் சிகிச்சையில் இருதயத் துளையை அடைப்ப தற்கு பட்டுத்துணியைப் பயன்படுத்தினார் டாக்டர் சாலமோன் விக்டர். பட்டுத்துணி நாளடைவில் நைந்து கிழிந்து போய்விடாதா? என்று கேட்டதற்கு அவர் சொன்ன விளக்கம்.

இருதயத் துளையைப் பட்டுத்துணியால் அடைக் கும் போது இருதய ரத்தஓட்டம் காரணமாக அந்தத் துணியில் ரத்தம்பட்டு துணி கெட்டியாகிவிடும். மேலும் அந்தத் துணியைச் சுற்றி சில வாரங்களில் சதைவளர் ந்து துணி அடைக்கப்பட்ட பகுதி தசையாக மாறிவிடும்.

உ

# சொல்லடுக்குப் போட்டி இல - 3

## விடைகள்

— ஸ்ரீகுமரன் —

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| த | அ | வு | ஸ் | ரே | லி | யா | ஈ | ரா |
| கெ | ன் | யா | க | மை | சு | க | க் | க் |
| ய | ட | சா | ட் | ஔ | ர | ந் | கு | மொ |
| ப் | ம | க | னி | மீ | ய | த | வ | சா |
| பா | சி | உ | சி | யா | டி | ன் | டோ | ம் |
| ன் | ரா | ஈ | டி | று | கு | கா | ர் | பி |
| ஐ | வரி | கோ | ஸ் | ற் | க் | னா | லி | க் |
| சு | கு | இ | லா | ணை | ன | சி | ர் | பூ |
| வி | ம | க் | க | ள் | சீ | ங் | க | ப் |

சதுரங்களில் மறைந்துள்ள நாடுகளின் பெயர்கள்.

(1) தண்சானியா (2) சாட் (3) கென்யா
(4) யப்பான் (5) ஈரான் (6) ஐவரி கோஸ்ற்
(7) ஈக்குவடோர் (8) மக்கள்சீனக்குடியரசு (9) அவுஸ்திரேலியா
(10) ஈராக் (11) மொசாம்பிக் (12) கானா
(13) சிங்கப்பூர்.

இப்போட்டியில் எம்மால் உறுதிப்படுத்தப் பெற்ற நாடுகளின் பெயர்களே இந்தப் பதின்மூன்றுமாகும். இவற்றை விட சில நேயர்கள் மேலதிகமாக சில நாடுகளையும் கண்டுபிடித்து அனுப்பியுள்ளார்கள். அவர்களுக்கும் ஆர்வமுடன் பங்குபற்றிய அனைத்து நேயர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பாராட்டுப் பெறும் நேயர்களின் பெயர் விலாசங்கள்

1) செல்வன் சி. வைகுந்தன் — புற்றளை மகாவித்தியாலயம்

2) செல்வன் வி. ரி. குபேந்திரன் — வேலாயுதம் மாவித்தியாலயம்

3) செல்வி அருணாசலம் தாரணி
மெதடிஸ்த பெண்கள் கல்லூரி — பருத்தித்துறை.

4) செல்வன் சின்னையா சிவசங்கர் — அல்வாய் கிழக்கு, அல்வாய்.

5) செல்வி சுகந்தி தங்கவேல் — புலோலி கிழக்கு, புலோலி.

6) செல்வன் நடராசா பாலகுமார் — சாவகச்சேரி.

7) செல்வன் குமரேசு சுதாகரன் — புலோலி மேற்கு, பருத்தித்துறை

8) செல்வி கு. சுதா, செல்வன் கு. சதீஸ்
மணல், வியாபாரிமூலை, புலோலி மேற்கு — பருத்தித்துறை.

9) செல்வி பு. நந்தினி — வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

10) செல்வன் சு. சங்கரன் — அல்வாய் மேற்கு, அல்வாய்.

11) செல்வி வே. செயந்தி — புலோலி மேற்கு, பருத்தித்துறை.

12) செல்வன் ந. ராகுலன் — யாழ். மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம்.

பிரமச்சாரியம் என்பது ஓர் அப்பிள் பழத்துக்குள்ளே வாழும் வண்டைப் போன்றது. அது நல்ல ருசியைச் சுவைக்கிறது. தசுந்திரமாக வாழ்கிறது. ஆனால் தனியாகவே சாகிறது. ஆனால் திருமணமோ பயனுள்ள தேனீயைப் போன்றது. அது கூடு கட்டுகிறது. அது பல பூக்ககளிலிருந்து தேனைச் சேகரிக்கிறது. கூட்டத்தோடு சேர்ந்து வாழ்கிறது. மனிதாபிமானத்தை வளர்க்கிறது.

— ஜெர்மிடெய்லர் —

ள —

# புதிர்

ஜெயா எனது நண்பன் அவன் ஒருநாள் என்னிடம் வந்தான். ''சரா சரியாக உனக்கு எத்தனை பிறந்த தினங்கள் வரும்?'' என்றான். நான் பலமுறை யோசித்தேன். சாதாரண மாக நான் ஒரு எழுபது வருடம் வாழ் வேன் என்ற நம்பிக்கையில் எழுபது பிறந்த தினங்கள் வரும் என்றேன். அவனோ அதை முற்றாக மறுத்தான். சரியான விடையையும் சொன்னான். எனக்கு எத்தனை பிறந்த தினங்கள் வரும் என நீங்களும் சொல்லுங்கள் கேட்போம்.

புதிருக்கான விடை பக்கம் — 23

சென்ற இதழ் புதிருக்கான விடை - ஒரு மணி நேரம் என்பதே. அலாம் மணிக்கூடு இருக்கிறதே... அதற்கு காலை, மாலை என்ற பேதம் தெரியாது. பன்னிரண்டு மணி நேரம் என்ற கணக்கிலேயே அது வேலை செய்யும். எனவே சங்கரால் ஒரு மணி நேரமே தூங்கி யிருக்க முடியும்.

( தற்போது மின்கலத்தில் இயங்கும் 24 மணி நேரம் வேலைசெய் யும் எலக்ரோனிக் கடிகாரங்கள் வந்துள்ளன. அவை சரியான நேரத் தில் தன்னியக்கமாக வேலை செய்யும். )

ஸ்ரீ—

# மூளைக்கு வேலை - 4

எங்கே கூட்டினுள் மறைந்திருக்கும்
ஊர்களைக் கண்டுபிடியுங்கள்
பார்க்கலாம்?

சொல்லடுக்குப் போட்டியில் கடந்த இதழில் பல நாடு களைக் கண்டு பிடித்து அனுப்பியிருந்தீர்கள். இவ்விதழில் - இங்குள்ள 81 சதுரங்களுக்குள்ளும் யாழ் மாவட்டத்தின் சில ஊர்கள் ஒழிந்துள்ளன. அவற்றைக் கண்டு பிடிப்பது உங்கள் பணி. நிபந்தனையை மறவாதீர்கள். ஒரு பெட்டிக் கும் அடுத்த பெட்டிக்கும் தொடர்பு இருக்க வேண்டும். பெட்டி கள் தாவக் கூடாது. எங்கே முயன்று பாருங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொ | டி | கா | ம | சு | ன் | னா | க | ம் |
| க் | ல் | ட் | ம் | உ | டு | த் | து | றை |
| கு | ப | ல | மா | த | வி | சி | ன் | து |
| வி | ரு | த் | ங் | க | ல் | பு | ச | த் |
| ல் | சு | ம் | தி | க | கு | டி | கே | டி |
| ந | மெ | கி | ப | த் | ல | மி | ங் | ட் |
| இ | யி | த | லி | சி | து | ட் | கா | வெ |
| மொ | னோ | னா | தீ | வு | ட் | றை | டி | ல் |
| கெ | பு | னி | கு | கை | த | டி | க | வ |

முடியாவிட்டால் பக்கம் — 28 ஐப் பார்க்கவும்.

# ஆபத்துக்குதவாத நண்பன்

கண்ணனும் பொன்னனும் இணை பிரியாத நண்பர்கள். ஒரு நாள் காட்டு வழியாகக் தமது உறவினர் வீட்டுக்குப் போனார்கள். போகும் வழியில் ஒரு பெரிய கரடி வருவதை பொன்னன் கண்டான். கண்டதும் தன் நண்பனான கண்ணனிடம் ''கண்ணா கண்ணா அதோ பெரிய கரடி வருகிறது. கிட்ட வந்தால் எமது கண்களைத் தோண்டித் தின்று விடும், ஆனால் கரடிக்கு மரம் ஏறத் தெரியாது வா கண்ணா மரம் ஏறுவோம் என்று சொல்லிக் கொண்டு மரம் ஏறினான் பொன்னன். மரம் ஏறத் தெரியாத கண்ணன் பயத்தால் செய்வதறியாது திகைத்தான்.

செத்த பிணத்தைக் கரடி தின்பதில்லை என்பது அவனது ஞாபகத்துக்கு வந்தது. கண்ணன் செத்த பிணம் போல நிலத்தில் படுத்தான். பயத்தால் அவன் ஆடாமல் அசையாமல் செத்தவன் போலக் கிடந்தான். கரடி கிட்ட வந்தது அவனை மணந்து பார்த்தது செத்தவன் போலக் கிடந்த கண்ணனை செத்த பிணம் என நினைத்து பேசாமல் வேறுபக்கம் சென்று விட்டது. மரத்தின் மேல் நின்று பார்த்துக் கொண்டிருந்த பொன்னன் மரத்தால் இறங்கி ''கண்ணா, கண்ணா கரடி போய்விட்டது எழும்பு எழும்பு'' என்று எழுப்பினான். கண்ணனும் எழும்பினான்.

பொன்னன் கண்ணனிடம் கேட்டான் ''கரடி உன் காதில் வந்து என்ன்வோ சொன்னதே தோழா அதை எனக்குச் சொல்லடா தோழா'' என ஆவலாகக் கேட்டான். கண்ணன் சொன்னான் ஆபத்துக்கள் வந்த வேளை உதவாத நண்பனை கனவிலுமே காணவேண்டாம். நாட வேண்டாம் என்று சொன்னது சொல்லிவிட்டு பொன்னனது பதிலுக்கு காத்திராமல் விடை பெற்றுச் சென்றான்.

க. மேரிகாஞ்ஜனா

ஆண்டு 3 ஏ

ஞானசாரியர் கல்லூரி — கரவெட்டி,

ள —

# ( இந்த இதழ் புதிருக்கான விடை )

சராசரி மனிதனுக்கு ஒரேயொரு பிறந்த தினம் மட்டுமே உண்டு. நீங்களோ நானோ எமது வாழ்நாளில் நாம் பிறந்த நாளில் பல கொண்டாட்டங்களை நடத்தியிருப்போம். ஆனால் எமக்கென்று பிறந்த தினம் ஒன்றுதானே!

## சென்ற இதழ் புதிருக்கான விடையைச் சரியாக எழுதி பாராட்டுப் பெறுவோரின் பெயர் விபரம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

1) செல்வன் குகதாஸ் முகுந்தன்
குடத்தனை.

2) செல்வன் சின்னையா சிவசங்கர்
அல்வாய்.

3) செல்வி ம. கேமலா
மண்டைதீவு மகாவித்தியாலயம்.

4) செல்வன் ந. ராகுலன்
யாழ் மத்தியகல்லூரி.

5) செல்வி அருணாசலம் தாரணி
மெதடிஸ்த பெண்கள் கல்லூரி — பருத்தித்துறை.

6) செல்வன் சி. வைகுந்தன்
புற்றளை மகாவித்தியாலயம்.

ஸ'—

# விண்வெளி காண்போம்.

அங்கம் : 2 — *நித்தியா.*

பிரபஞ்சம் பிரமாண்டமானது அதிலுள்ள பால் வளி மண்டலம்; அதற்குள் சூரிய மண்டலம். அந்தச் சூரிய மண்டலத்தின் சிறு புள்ளியே பூமி. இவற்றைக் கடந்த இதழில் பார்த்தோம். அறிவியல் விருத்தி அடையாத பண்டை நாட்களில் பூமியைப் பற்றியும் சூரியனைப் பற்றியும் ஏனைய கிரகங்கள் பற்றியும் பல விதமான தப்பபிப்பிராயங்கள் நிலவி வந்துள்ளன.

ஆரம்ப நாட்களில் பூமி தட்டையானதென்றே பலரும் எண்ணியிருந்தனர். சூரியன் பூமியைச் சுற்றி வருவதாகவும் வான் மண்டலம் தட்டையாக ஒரு எல்லை வரை பரவி முடிவுள்ளதாக அமைந்திருப்பதாகவும் எண்ணினர். வானில் ஒளி மிக்க நட்சத்திரங்கள் பொருத்தி வைக்கப்பட்டுள்ளதெனவும், சந்திரனும் அவ்வாறே எனவும் எண்ணினர்.

இந்த எண்ணங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து, கி.மு 500ம் ஆண்டளவில் ஹெக்காடியஸ் என்ற கிரேக்கர் பூமி வட்டமானது என்றார். வட்டமான பூமி நிலையான தூண்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என அவர் நினைத்திருந்தார். எனினும் இவரது வித்தியாசமான கூற்றை அக்காலத்தோர் ஏற்கவில்லை. அதன் பின்னர் கி.மு. 450-ம் ஆண்டளவில் பைலோலாஸ் என்ற கிரேக்கர் பூமி உருண்டையானது என்றார். இவரது கூற்று அக்காலக் கிரேக்க அறிஞர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறிப்பாக, கிரேக்க தத்துவஞானியான அரிஸ்ரோட்டில் அதை ஏற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் பூமி உருண்டையானது என்ற கருத்து நிலை நாட்டப்பட்டது. ஆனால் பூமி

உருண்டை என்பதற்கான பூரண விளக்கங்களோ, பூமியின் அளவு தொடர்பான விபரங்களோ முன் வைக்கப்படவில்லை.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில், எரோட்டோஸ் தனிஸ்' என்பவர் பூமியின் சுற்றளவு, விட்டம் என்பவற்றை கேத்திர கணித முறைப்படி கணித்துச் சொன்னார். மிகவும் எளிய முறை அது. இதன்படி கணித்து அவர் பூமியின் சுற்றளவு இருபத்திஐயாயிரம் மைல் எனவும், பூமியின் விட்டம் எண்ணாயிரம் மைல் எனவும் கூறினார். அவரது கணக்கு உண்மையில் சரியானதுதான்.

பிற்காலத்தில் நவீன அறிவியல் வளர்ச்சியால் ஆராயப்பட்டு பூமியின் சுற்றளவு 24902 மைல் எனவும், பூமியின் விட்டம் 7917 மைல் எனவும் கண்டறியப் பட்டுள்ளது.

இவ்வாறு புவியைப் பற்றித் தொடங்கிய ஆராய்ச்சி சூரியன், சந்திரன் என விண்வெளி நோக்கிப் பரந்து விரிந்தது.

அரிஸ்டோர்க்கஸ் என்ற அறிஞர் சந்திரனதும், சூரியனதும் தூரங்களை அளந்து கூறினார். சந்திரன் பூமியிலிருந்து இரண்டு இலட்சத்து நாற்பதினாயிரம் மைல், எனவும் சூரியன் பூமியிலிருந்து ஐம்பது இலட்சம் மைல் எனவும் அவர் கூறினார். சந்திரன் பற்றிய கணிப்பீடு சரியாக அமைந்தது. சூரியன் பற்றிய கணிப்பீடு சரியாக அமையவில்லை. திரிகோண கணித அடிப்படையில் பூமி, சூரியன், சந்திரன் என்பவற்றை ஆதாரமாக வைத்து இவர் மேற்கொண்ட கணிப்பீடுகளில் சந்திரனது கணிப்பீடு சரியாக அமைந்தது. சந்திரனின் விட்டத்தையும் இந்தக் கணிப்பீட்டினால் அறியக் கூடியதாக இருந்தது.

தற்போது சந்திரனின் விட்டம் 2160 மைல் எனவும், பூமியிலிருந்து தூரம் 2,38,855 மைல் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

(தொடரும்)

வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கமல்ல
வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.

ள —




# சேர் ஐசாக் நியூற்றன்

— யசோதா செல்வராசா —
சுன்னாகம் தெற்கு – சுன்னாகம்.

இங்கிலாந்திலே ' ஊல்ஸ் தோப் ' என்னும் கிராமத்திலே அப்பிள்மரங்கள் நிறைந்த தோட்டமொன்றிருந்தது. அக்கிராமத்தில் வசித்த ஆங்கில இளைஞன் ஒருவன் அத்தோட்டத்தின் மர நிழலில் அமர்ந்து சிந்தனையில் மூழ்கியிருந்தான். அப்பொழுது அப்பிள்பழமொன்று அவனருகில் விழுந்தது பழுத்த அப்பிள்பழங்கள் இவ்வாறு விழுவதை அவன் முன்னரும் பல முறை பார்த்து இருக்கின்றான். ஆனால் இஃது அவனது ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டியது.

பழமும் ஏனைய பொருட்களும் கீழ் நோக்கி விழுவதேன்? அவை மேல்நோக்கி ஏன் செல்லவில்லை? என்ற விசாரணை அவன் உள்ளத்தில் உதித்தது. அவ்விசாரணைக்கு விடைகாண அவன் பல ஆராய்ச்சிகள் செய்தான். ஈற்றில் புவியீர்ப்பே அதற்குக் காரணம் எனக் கண்டறிந்தான். அவனே ஐசாக்நியூற்றன் என்னும் விஞ்ஞானி.

ஆயிரத்து அறுநூற்று நாற்பத்திரண்டாம் ஆண்டு நத்தார் தினத்தன்று நியூற்றன் பிறந்தான்

'நத்தார் தினப்பரிசாக' அவர் உலகிற்கு கிடைத்தாரென்று அறிஞர் பாராட்டுகின்றனர். அவர் தாயின் வயிற்றில் இருந்தபோதே அவரது தந்தை இறந்துவிட்டார் அதனால் அக்குடும்பம் வறுமையால் வாடியது. தாயார் மறுமணஞ் செய்தபடியால் இரண்டாவது வயது முதல் நியூற்றன் தமது பாட்டியாருடனே வளர்ந்து வந்தார்.

இளமைப் பருவத்தில் நியூற்றன் காற்றாடி, நீர்க்கடிகாரம் போன்றவை செய்யும் முயற்சியிலே பெரும் பொழுதைக் கழித்தார். படம் வரைவதிலும் வாசிப்பதிலும் ஆர்வமுடையவராய் இருந்தார். 14வது வயதில் நியூற்றன் மீண்டும் தாயாருடன் வாழச் சென்றார். விவசாயம் அவர்களது குடும்பத் தொழிலாகையால் மகனுக்குப் பயிற்சியளிக்கவே தாயார் விரும்பினார். ஆனால் நியூற்றன் தோட்டத்தில் இருந்து வாசிப்பார், சிந்திப்பார் அல்லது ஆக்கபூர்வமான விளையாட்டில் ஈடுபடுவார். ஈற்றில் அவரது ஆற்றலையும் ஆர்வத்தையும் கண்டு கல்வி டயில்வதற்கு கேம்பிரிச்சு பல்கலைக் கழகத்தில் சேர்த்தனர். நியூற்றன் தமது 22-வது வயதில் டட்டதாரியாகி 26-வது வயதில் கணிதப் பேராசிரியரானார்.

விஞ்ஞான வளர்ச்சிக்கு அவர் செய்த சேவைகள் பல. அவர் புவியீர்ப்புக் கொள்கையைக் கண்டறிந்துதவினார். இருட்டறையினுள் சூரிய ஒளிக்கற்றையை சிறு துவாரம் வழியே புகவிட்டு பல பரிசோதனைகள் செய்தார். அவற்றால் சூரியஒளியில் 7 நிறங்கள் உண்டு என்பதைக் காட்டினார். அவரது அரிய சேவைகளை பாராட்டு முகமாக அவருக்கு 'சேர்' என்ற பட்டம் வழங்கப் பட்டது.

சிந்தனையில் மூழ்கி தம்மையே மறந்திருப்பது நியூற்றனது இயல்பு. ஒருநாள் மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண் துஞ்சாது தமது பணியில் அவர் ஈடுபட்டிருந்தார். அவரது உணவு மேசையில் உண்ணப்படாமலே இருந்தது. உணவை உண்ணாது அவர் கருமமே கண்ணாயிருந்தார் அங்கே வந்த நியூற்றனின் நண்பர் ஒருவர் குறும்பு செய்ய எண்ணி உணவை தாமே உண்டு வெறும் பாத்திரங்களை விட்டுச் சென்றார்.

நெடுநேரங் கழித்து மிக்க பசியுடன் நியூற்றன் உணவை நாடி வந்தார். அங்கே உணவு இல்லை. வெறும் பாத்திரங்களே இருந்தன. அவற்றைப் பார்த்த அவர் 'நான் உணவு முன்னரே அருந்தி விட்டேன்' என்று திரும்பிச் சென்றார்.

நியூற்றன் தற்பெருமை இல்லாதவர். தமது சாதனைகள் மிக மிக அற்பமானவை என்றே எண்ணினார். அதனால் தமக்கு முன் வாழ்ந்த விஞ்ஞானிகளை அவர் போற்றினார்.

ஸ—

# மூளைக்கு வேலை - 4

## விடைகள்

(1) கொல்லங்கலட்டி
(2) கொக்குவில்
(3) குரும்பசிட்டி
(4) கொடிகாமம்
(5) பருத்தித்துறை
(6) கைதடி
(7) சுன்னாகம்
(8) வல்வெட்டித்துறை
(6) உடுத்துறை
(10) உடுவில்
(11) மாதகல்
(12) நயினாதீவு
(13) காங்கேசன் துறை

★ சூரியன் பிறருக்கு ஒளி கொடுக்கிறது
காற்று பிறருக்காகவே வீசுகிறது
மரம்கூட பிறருக்காகத்தான் பூத்துக்
காய்த்துப் பழுத்துக் குலுங்குகிறது
நிழல்கூடத் தருகிறது — ஆனால்
மனிதன் மட்டும் தனக்காக வாழவிரும்புகிறான்
உன் வாழ்க்கை எப்படி......?

★ சமுதாயத்தால் வளர்வதும் மனிதன்
சமுதாயத்தை வளர்ப்பதும் மனிதன்.

★ கப்பல் நீரில் செல்ல வேண்டும் — ஆனால்
கப்பலுக்குள் நீர் செல்லக் கூடாது.

ஸ—

# அறிவுப் போட்டி - 5

01. உலகத்தில் மிக அண்மையில்- முப்பது வருட வீரஞ் செறிந்த போராட்டம் நடத்திய ஒரு நாடு சுதந்திர நாடானது. அந்நாடு எது?
அதற்குச் சுதந்திரம் வழங்கி அங்கீகரித்த நாடு எது?

02. லேசர் கதிர் இன்று தொழிநுட்ப, மருத்துவத் துறைகளில் பெரிதும் பயன்படுகிறது. லேசர்கதிர் என்றால் என்ன?

03. உலக அதிசயங்கள் எட்டு ஆகும். அவற்றில் இப்போதுள்ள ஒரே ஒரு அதிசயம் எது?
அது எங்குள்ளது?

04. தமிழில் இலக்கணம் கூறும் நூல் எது?
அதனை இயற்றியவர் யார்?

05. இந்த நூற்றாண்டின் மாபெரும் விஞ்ஞானி யார்?
அவர் எந்த நாட்டில் பிறந்தார்?

06. புவியாயினும் சரி ஏனைய கோள்களாயினும் சரி அவை அந்தரத்தில் நிற்பதற்குக் காரணம் என்ன?

07. உலகில் பொருளாதாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ள ஒரு நாட்டில் அண்மையில் பூகம்பம் ஏற்பட்டது. அந் நாடு எது?
இதில் கொல்லப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?

08. இலங்கையின் மிகப் பெரிய நதியான மகாவலிகங்கை எங்கு கடலுடன் கலக்கிறது?
அது கடலுடன் கலக்கும் இடங்களில் அவற்றிற்குப் பெயரென்ன?

09. சீனப் பெருஞ்சுவரைக் கட்டிய அரசன் யார்?

10. மகாகவி பாரதியார் பெண் விடுதலையைச் சுட்டிப்பாடிய காவியமெது?

சரியான விடைகளை 30-10-1993 க்கு பிந்தாமல் அனுப்பவும்.

ஏட —

# அறநெறிப் போட்டி இல - 3

—நிறுவனர்—

(1) கல்வி அறிவில்லாதவன் பாடிய கவிதை எதைப் போன்றது?

(2) இதழால் பெரிய பூ எது? இதழால் சிறிய பூ எது? சுகந்தமணத்தால் சிறந்த பூ எது? இதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

(3) நல்ல மரம் என ஔவையார் யாரைக் குறித்துரைக்கின்றார்?

(4) பண்டு முளைப்பது அரிசியேயானாலும் விண்டுமி நீங்கின் முளைக்குமா?

(5) உற்ற இடத்திலுயிர்வழங்குந் தன்மையோர் பற்றலரைக் கண்டால் பணிவரோ என்பதற்கு உவமானமாகக் கூறிய பொருளின் சிறப்பம்சத்தைத் தருக?

(6) வடிவத்தால் வளர்ந்து உயர்ந்த மரங்கள் எக்காலத்தில் கனியைத் தரும்?......... இக் கருத்தை வைத்து எமக்கு புலப்படுத்தியுள்ள விடயத்தை விளக்குக?

(7) பின்வருவனவற்றின் பொருள் தருக:-

i) ஈரமில்லா–

ii) புல்லறிவாளர்–

iii) நீராம்பல்–

சரியான விடைகளை 30-10-1993க்கு பிந்தாமல்

நிறுவனர்
அறநெறிப் போட்டி
விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு — பருத்தித்துறை.

என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள் பெறுமதியான பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

ஏ —

செந்தமிழ்ச் செல்வி 1926 பங்குனி – சித்திரை
இதழிலிருந்து தொகுத்தவை.

# THE IDEAL OF A STUDENT'S LIFE

# மாணாக்கர்களுடைய
# வாழ்க்கையின் குறிக்கோள்

( சிந்துபூத்துறை, மா. வே. நெல்லையப்பபிள்ளை, பீ. ஏ. )

சென்ற இதழ் தொடர்......

இரவு ஒன்பது மணிக்கு நித்திரைக்குப் போய்க் காலை $4\frac{1}{2}$ அல்லது 5 மணிக்கு நித்திரை விட்டெழுதல் நலமாயிருக்கும். பரீட்சை என்று சில நாட்களில் அதிக நேரம் விழித்திருந்து படித்தல் கூடாது. நாள்தோறும் மேலே சொல்லிய முறைப்படி பாடங்கள் படித்துக் கொண்டு வந்தால் பரீட்சை நாள் வந்தாலும் அதிக நேரம் படிக்க வேண்டிய அவசியம் நேரிடாது.

(9) **ஒழுக்கப் பயிற்சி:** மேலே சொல்லிய மனப் பயிற்சியினால் உண்டாகும் அறிவின் பயன் ஒழுக்கமாகும். ஒருவருக்கு அறிவு இருந்து ஒழுக்கம் இல்லையானால் அந்த அறிவினால் அவருக்கு யாதொரு பயனும் உண்டாகாது. ஒருவர் கல்விகற்றல் அவர் ஒழுக்கமுடையவராய் இருத்தற்காகத்தான். ஆகையால் உங்களுடைய உலக வாழ்க்கையில் இன்றியமையாத ஒழுக்கத்தை நீங்கள் உங்கள் இளமையிலேயே பள்ளிக்கூட வாழ்க்கையில் அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

(10) இந்த ஒழுக்கத்தை நீங்கள் அமைத்துக் கொள்ள நான் எனக்குத் தெரிந்த சில வழிகள் சொல்லுகிறேன். ஒழுக்கம் என்பது ஒரு நாளில், ஒரு வாரத்தில், ஒரு மாதத்தில் அல்லது ஒரு ஆண்டில் வேண்டும் என்று நினைத்த பொழுது உண்டுபண்ணி வைத்துக் கொள்கிற பொருள் அல்ல. இந்தப் பள்ளிக்கூட காலம் முடிவாகிறவரை நீங்கள் நாள்தோறும் முயன்று முயன்று வருந்தி அமைத்துக் கொள்கிற பொருளாகும். நீங்கள் ஒவ்வொரு நாளிலும் அப்படி அல்ல, ஒவ்வொரு நிமிஷத்திலும் உங்கள் மனதில் எண்ணுகிற எண்ணங்களும் இச்சை

களும் உங்கள் வாக்கினாற் சொல்லுகிற சொற்களும் உங்கள் உடலி னாற் செய்கிற செயல்களும் அந்த ஒழுக்கம் என்கிற கட்டடத்தைக் கட்டுகிற சாமான்களாயிருக்கின்றன. ஒரு கட்டடத்தின் பலம் அதைக் கட்டுகிற சாமான்களைப் பொறுத்திருப்பதைப் போல உங்கள் உலக வாழ்க்கைக்கு உதவும்படியான ஒழுக்கத்தின் தன்மையும் நீங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையில் உண்டுபண்ணுகிற எண்ணங்களையும் இச்சை களையும், சொற்களையும், செய்கைகளையும் பொறுத்திருக்கின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு உங்கள் எண்ணங்கள் முதலியவை நல்லனவாக இருக்குமோ அவ்வளவுக்கு அவ்வளவு உங்கள் ஒழுக்கமும் நல்லனவாக அமையும். நீங்கள் இந்த இயல்பு முறையைக் கவனித்து உங்கள் சம்பந்தமாயும் பிறர் சம்பந்தமாயும் உங்கள் வீடுகளிலும் பள்ளிக் கூடத்திலும் நல்ல எண்ணங்களையே எண்ணல் வேண்டும்; நல்ல இச்சைகளையே இச்சித்தல் வேண்டும்; கெட்ட எண்ணங்களும் கெட்ட இச்சைகளும் உங்கள் மனதில் வருமானால் அவைகளை அவைகளுக்கு எதிரிடையான நல்ல எண்ணங்களையும் நல்ல இச்சைகளையும் நினைத்து விலக்கல் வேண்டும். உங்கள் வீட்டிலுள்ள பெற்றோர் முத லியவர்களிடத்திலும். பள்ளக்கூடத்திலுள்ள உபாத்தியாயர்கள், பிள்ளைகளிடத்திலும் இனிய சொற்களையும் பயனுடைய சொற்களை யும் சொல்லல் வேண்டும். கடுஞ் சொற்களைச் சொல்லக் கூடாது. அதே பிரகாரம் உங்களுக்கும் பிறருக்கும் நன்மை தரும் செய்கைக ளையே செய்தல் வேண்டும். உங்கள் வீடுகளிலும் பள்ளிக்கூடத்திலும் வெளியிலும் சமயம் வந்த பொழுதெல்லாம் பரோபகாரச் செயல்களைச் செய்துவரல் வேண்டும். எந்த உயிருக்கும் அற்பமாயினும் கேடு நினைத் தல் கூடாது, செய்தல் கூடாது. நீங்கங் உங்கள் பெற்றோர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் அடங்கி அவர்கள் உங்களுக்கு நல்லண யாவை, தீயன யாவை என்று சொல்லுகிற சொற்களைக் கேட்டு நடத்தல் வேண்டும். நீங்கள் எப்பொழுதும் தீமையை விலக்கியும் நன்மையை நாடியும், பெரியோர்கள் சொற்களைக் கேட்டும் நல்வழியில் வருந்தி முயன்று நடந்து வருவீர்களானால் உங்கள் ஒழுக்கமும் நல்ல ஒழுக்கமாக அமையும். நீங்கள் உங்கள் உலக வாழ்க்கையில் அதிகப் பணமுடையவர்களாயிருக்கலாம்; கொஞ்சப் பணமுடையவர்களாயிருக் கலாம்; ஏழைகளாயிருக்கலாம்; பெரிய வேலையில் அமர்ந்திருக்கலாம்; சிறிய வேலையில் அமர்ந்திருக்கலாம்; எந்தநிலை உங்களுக்குக்கிடைத் தாலும் அந்த நிலையில் உங்கள் வாழ்க்கையைச் செவ்வையாய் நடத்த

நல்லொழுக்கம் அவசியமாய் வேண்டியது. ஆகையால் நீங்கள் உங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையில் ஒழுக்கம் அமைத்தலையே ( *building of character*) குறியாக வைத்து ஒழுகல் வேண்டும்.

(11) சமயப் பயிற்சி: சமயப் பயிற்சி சம்பந்தமாய் நீங்கள் சமய உண்மைகளை அறிந்து கொள்ள உங்களுக்கு இப்பொழுது தகுந்த வயது வரவில்லை. ஆயினும் சில உண்மைகள் பொதுவாய் உங்களுக்குத் தெரிய வேண்டும். அவைகளைக் கீழே சொல்லுகிறேன்.

(12) எங்கும் நிறைந்திருப்பவராயும் எல்லாம் செய்ய வல்லவராயும் எல்லாம் அறிபவராயும் உள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் உலகிலுள்ள உயிர்களையெல்லாம் தம்மிடத்தினின்றும் பிரிக்க முடியாத அருள் என்னும் சக்தியினால் காக்கின்றார். மக்களாகிய நாம் எல்லாம் அவர் அருளினுடைய உதவியின்றி ஒரு கணமும் இருக்க முடியாது. அவர் அருளை நினைந்து கொண்டே நாம் எல்லாக் காரியங்களையும் செய்தல் வேண்டும். பிள்ளைகளாகிய நீங்களும் உங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையில் படிக்கும் பாடங்கள், விளையாடும் விளையாட்டுக்கள், இன்னும் நீங்கள் செய்யும் வேறு செயல்கள் ஆகிய இவை எல்லாம் கடவுளினுடைய அருளை நினைந்து கொண்டே செய்தல் வேண்டும். கடவுளினுடைய அருளை நினைந்து கொண்டு செய்கிறதானால் நீங்கள் செய்யும் எந்தச் செயலும் அவர் அருளுக்கு ஒத்து இணங்கியிருத்தல் வேண்டும்; எதிரிடையாயிருத்தல் கூடாது. கடவுளுடைய அருளுக்கு ஒத்து இணங்கியுள்ள உங்கள் எண்ணங்கள், இச்சைகள், செயல்கள் ஆகிய இவைகள் எல்லாம் **அறம்** அல்லது **புண்ணியம்** என்று சொல்லப்பெறும்; அவர் அருளுக்கு எதிரிடையான உங்கள் எண்ணங்கள், இச்சைகள், செயல்கள் ஆகிய இவைகள் எல்லாம் மறம் அல்லது **பாவம்** என்று சொல்லப்பெறும். இதனால் மேலே சொன்ன நல்லொழுக்கம் உங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமானது என்று அறியலாம். ஆகையால் நீங்கள் ''அறம் செய்ய விரும்பு'' என்று ஔவைப்பிராட்டியார் சொல்லிய வண்ணம் எப்பொழுதும் கடவுளின் அருளினையே நினைந்து மறத்தை விலக்கி அறத்தையே செய்துவரல் வேண்டும். அப்படிச் செய்வீர்களானால் உங்களுக்குச் சகல நன்மைகளும் உண்

டாகும். நான் இங்கே சமயப் பயிற்சியில் சிறிதே சொன்னேன். இன்னும் உங்கள் உபாத்தியாயர்கள் இது சம்பந்தமாய்ச் சொல்லும் உண்மைகளைக் கேட்டு அறிந்து கொண்டு நடக்க வேண்டும்.

**(13) முடிவுரை** நீங்கள் இப்பொழுது கீழ்த்தரப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் சிறுவயதுடைய வாலிபர்களாயிருக்கிறீர்கள். உங்கள் மனது இப்பொழுது தான் பளிங்கு போல சுத்தமாயிருக்கின்றது. அழுக்குப் படியாத துணியில் நன்றாகச் சாயம் பிடிப்பது போல உங்கள் மனதில் எந்த நல்ல பழக்கங்களும் பதியும். இந்தப் பள்ளிக்கூடத்திலிருக்கும் பொழுது நீங்கள் பழகுகிற பழக்கங்கள்தான் உங்களுக்குப் பின்வாழ்க்கையில் உண்டாகும் மேலான அறிவுக்கும் திருந்திய ஒழுக்கத்திற்கும் அடிப்படையாயிருக்கும். இனி உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் பின் வாழ்க்கையிலும் உண்டாகும் பழக்கங்கள் எல்லாம் மேற்படைகள் ஆகும். அடிப்படை நன்றாய்ப் போடாவிட்டால் மேற்படை நிலையாய் நில்லாது. அடிப்படை நன்றாகக் கட்டப்படாத கட்டடம் எப்படிப் பலக்குறைவாய் விடுமோ அதுபோல இந்தப் பள்ளிக்கூட வாழ்க்கையில் உங்களுடைய ஒழுக்கமும் அறிவும் சிறப்பாக அமையாவிடின் உங்கள் கல்வியால் எதுவித பிரயோசனமுமில்லை. ஆகையால் இந்த உண்மையைக் கவனித்து நீங்கள் வேறுவகைப் பயிற்சியின் தலைப்பிற் சொன்ன விஷயங்களை மனதில் வைத்துக் கொண்டு நடக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வீர்களானால், உங்கள் பின் வாழ்க்கை நல் வாழ்க்கையாகும். நீங்கள் இந்திய மாதாவுக்கு அவள் மேலான நிலை அடையத் தொண்டு செய்யும் சிறப்புடைய மக்கள் ஆவீர்கள். நமது இந்திய நாடு பிறநாட்டார்களால் மதிக்கும்படியான சீர்மையும் சிறப்பும் அடையும்.

எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால் உங்களுக்குச் சகல நன்மைகளும் உண்டாவதாக.

நன்றி: செந்தமிழ்ச் செல்வி 1926 பங்குனி – சித்திரை இதழ்.

★ △ ★

# கலைந்த வேடம்

— செல்வா —

ஒரு ஊரிலே குடியானவன் ஒரு நாயையும் கழுதையையும் வளர்த்து வந்தான். இந்த இரண்டு பிராணிகளிடத்தும் தனது பாசத்தைச் சமபங்காகச் செலுத்தி வந்தான். நாய்க்கு உள்ளுக்குள் குடியானவன் தன்னிலும் பார்க்க கழுதை இடத்தே கூடிய பிரியம் வைத்திருப்பதாக தப்புக்கணக்குப் போட்டது. ஆனால் கழுதையோ தனது எசமானிடத்து கூடிய விசுவாசம் வைத்திருந்தது. ஒருநாள் நடுஇரவு வேளை ஒரு கள்வன் வீட்டில் கன்னம் வைத்து பொருள்களைச் சூறையாட எத்தனித்தான். கள்வனின் முயற்சியைப் பார்த்த நாயோ கண்டும் காணாதது போல அடுத்த பக்கம் திரும்பிப் படுத்தது. நாயின் நடத்தையைப் பார்த்த கழுதை 'என்ன நண்பா நமது வீட்டில் கள்வன் வந்துள்ளான். நீயோ குரல் கொடுத்து எஜமானை எழுப்பாது சோம்பலாகப் படுப்பது முறையாகுமா' என்று அன்பாகக் கேட்டது.

'நீ உம்மடை வேலையைப் பாரும். எனக்கு என்ரை வேலை தெரியும். ஏன் என்ரை வயிற்றெரிச்சலைக் கிளறுகிறாய் என்றது' நாய். 'வீண்கதை வேண்டாம் நண்பா! இப்ப உனது குரலைக் கொடுத்து எஜமானை எழுப்பு என்று மன்றாடியது கழுதை. கழுதையின் வேண்டுகோள் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் பிரயோசனம் அற்றுப் போனதை உணர்ந்த கழுதை தனது குரலைக் கொடுத்து வீட்டைச் சுற்றிச்சுற்றி ஓடியது. தனது நித்திரையைக் குழப்பி கத்தித்திரியும் கழுதைக்கு விசர்பிடித்து விட்டது என்றுஎண்ணிய குடியானவன் பெரிய தடி எடுத்து அடிஅடியென்று அடித்து வீட்டை விட்டுத் துரத்தினான். கழுதைக்கு பெரிய ஏமாற்றமாய்ப் போய்விட்டது. நான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கின்றதே என்று ஏங்கியது கழுதை.

சோம்பலை முறித்துக் கொண்டு வெளியே வந்த நாய் கழுதையைப் பார்த்து நண்பா! ஏன் வீணாய் வில்லங்கத்தில் மாட்டினாய். உனக்கு எனது அனுதாபங்கள் என்றது. கழுதை மனம் உடைந்து தனது நண்பனான நாயிடம் விடை பெற்றுக் கொண்டு அருகிலிருந்த காட்டுக்குப் போனது. வீட்டிலே எஜமா

னுக்கு அடங்கி, ஒடுங்கி கட்டுப் பட்டு வாழ்ந்த கழுதைக்கு இக் காட்டு வாழ்க்கை புதிய அனுப வத்தை ஏற்படுத்தியது.

ஒருநாள் எதிர்பாராமல் சிங் கத்தின் தோல் ஒன்றைக் கண்ட கழுதை குளிரின் கொடுமையால் அதை எடுத்துப் போர்த்துக் கொண்டது. போர்வை தனக்கு அளவானதாக இருப்பதோடு ஆறுதலாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டது கழுதை. தனது சிங்கப் போர்வையைக் கண்டதும் மற்றைய மிருகங்கள் தனக்கு மரியாதை செலுத்துவ தைக் கண்டு உள்ளுக்குள் சிரித் துக் கொண்டது.

தன்னிலும் வலிமை கூடிய மிருகங்கள் எல்லாம் வந்து தன் னிடம் நீதி கேட்பதையும் தன் னைக் கண்டதும் மரியாதையாக விலகி நடப்பதையும் கண்ட கழு தைக்கு தன் உள்ளத்தில் பெருமி தமான நினைவுகள் கனவுகள் போல் விரிந்தது. அதிஷ்ட வச மாகக் கிடைத்த இந்த இராச வாழ்வை தன் நண்பனான நாய்க்கு காட்ட வேண்டும். என்னை தடியாலை அடித்து விசர்ப்பட்டம் சூட்டிய எஜமா னுக்கு ஒரு பாடம் புகட்ட வேண் டும் என்றும் தனது மனதுக்குள் திட்டம் தீட்டிய கழுதையார் காட்டில் இருந்து தனது வீட்டிற் குச் சென்றது. தன்னைக் கண்ட நண்பனான நாய் பதுங்கி ஒழிப் பதை கண்ட கழுதையார் தன் போர்வையைக் கழற்றி தன் சுய உருவத்தைக் காட்டி 'நான் உன் பழைய நண்பன் தான் பயப்ப டாதே' என்று கூறி தனது எஜ மானைத் தேடிக் கொண்டு சென் றது.

தன்னைக் கண்ட எஜமான் பயப்படாது இருப்தைக் கண்டு திகைத்த கழுதை பெரிதாக சிந் தித்தது. கழுதை யோசிப்பதைக் கண்ட எஜமான் 'என்னைப் பயப் படுத்தலாம் என்றா இந்தக் கோலம் போட்டாய்' எப்படி வேஷம் போட்டாலும் உனது காது காட்டிக் கொடுக்கிறதே என்றான் எஜமான்' தனது மதியீ னத்தை எண்ணி மனதுக்குள் நாணிய கழுதை தனது வேசத் தைக் கலைத்து தனது எஜமா னுக்கு நாளெல்லாம் உழைக்க உறுதி பூண்டது.

# எங்களை ஏன்

# அழிக்கின்றீர்கள்!

- ★ சுத்தமான காற்றைத் தந்து சுவையான கனியைத் தந்து சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் எங்களை ஏன் அழிக்கிறீர்கள்.

- ★ நாம் தானே பெரு விருட்சமாய் வளர்ந்து வானிலே பாய்ந்தோடும் கருமுகில்களை குளிரவைத்து மழையாகப் பொழிய வைக்கின்றோம். பெருவெள்ளமாய் பாய்ந்தோடும் நீரால் மண்ணின் செழுமையை அபகரியாது அணைபோட்டு தடுத்து வைத்து உற்பத்திக்கு உழைக்கின்றோம். உதவி செய்யும் எம்மையேன் அழிக்கிறீர்கள்.

- ★ விறகுக்கென்றும், வீடு கட்டுதலுக்கென்றும் எம்மை தினம் தினமாய் அழிக்கின்றீர்களே நீங்கள் உண்ணும் உணவுகளை உற்பத்தி செய்யும் தாவரவர்க்கத்துக்கு பசளையாய் நாம் உயிர்ஊட்டி நல் உணவைப் படைப்பதற்கு உழைப்பதை மறந்து விட்டீர்களா?

- ★ நீங்களும் வாழுங்கள் - எங்களையும் வாழவிடுங்கள். நாங்கள் உங்கள் நண்பர்கள் என்பதை மறந்து விட்டீர்களா? எனவேதான் சொல்கின்றோம் எங்களை அழிக்காதீர்கள்.

- ★ நாங்கள் அழிந்தால் நீங்களும் அழிவீர்கள் - நாடும் அழியும் எனவேதான் எங்களை வளர்க்கச் சொல்கிறோம்-நாளைய மண்ணின் மீது பற்றுள்ள உங்களைக் கேட்கின்றோம் எங்களை ஏன் அழிக்கின்றீர்கள் என்று.

மரங்களே எமது சொத்து!
எதிர்கால ஈழத்தின் முத்து!!
இன்றே நடுவாய் நல்வித்து!!!

ஊ —

எமது வெளியீடுகளை
பின்வரும் விலாசங்களில்
பெற்றுக் கொள்ளலாம்

★ பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்றச் ச. ச. நி,

★ சி. சி. வரதராசா
– கொழும்புத்துறை.

★ சிவ. ஆறுமுகசாமி
– கோணாவளை கிழக்கு,
கொக்குவில்.

★ வழி கலை இலக்கிய வட்டம்
– சுன்னாகம்,

★ அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவனம்
– கண்டி றோட், கைதடி.

★ அன்னை மருந்தகம்
– பருத்தித்துறை.

★ S. K. சாமி — நெல்லியடி.

★ கலைச்சோலை
– வல்வெட்டித்துறை.

★ அபிராமி மருந்தகம்
– நீர்வேலி.

★ சின்னையா ஸ்ரோர்ஸ்
– கொடிகாமம்.

★ சிவம் மருந்தகம்
– சாவகச்சேரி.

★ சூரியா பார்மசி
– புத்தூர்.

★ ரி. வி. பாலா புத்தகசாலை
– இணுவில்.

---

இவ் வெளியீடு புலோலி மேற்கு விநாயகர் தரும நிதியத்திற்காக விநாயகர் தரும நிதிய அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

---

திரு. M.Y.Kalamany